விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27

ஒலி 209 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 32 வியாழக்கிழமை (16.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## போலி ஆவணங்களுடன்
## யாழில் தனியார் காணிகளை கையகப்படுத்த முயற்சி
### மோசடிக் கும்பல் தொடர்பில் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போலி ஆவணங்களுடன் , தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தும் கும்பல் தொடர்பில் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியில்
## இரண்டு குழந்தைகளின் என்புத் தொகுதிகள் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் இருந்து நேற்று இரண்டு குழந்தைகளின் என்புத் தொகுதிகள் அடை யாளம்

02ஆம் பக்கம் பார்க்க

## தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டாலும்
### க.பொ.த (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தரா தரப் பத்திர (சாதாரண தர) பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை (NIC)

15ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டிப் பாலம் ஊடாக
## பார ஊர்திகள் பயணம் செய்யத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மன்னார் வீதியில் அமைந் துள்ள சங்குப்பிட்டிப் பாலம் ஊடாகப் பார ஊர் திகள் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட் டுள்ளதாக யாழ்ப்பாணம்

16ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசுக்கு எதிராக
# எதிர்க்கட்சிகளின் கூட்டணி
# ஐ.நாவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

அநுர அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஐ.நாவிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)



## கழிவு மீள்சுழற்சி மையத்தை காக்கை தீவிலிருந்து அகற்றுக
### யாழ்.மாநகரசபை முன் அப்பகுதி மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் உள்ள கழிவு மீள்சுழற்சி மையத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவை
## "பசுமை எரிசக்தித் தீவுகளாக" மாற்ற நடவடிக்கை எடுக்குக
### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நயினாதீவு நெடுந்தீவு, மற்றும் அனலைதீவு ஆகியவற்றை 'பசுமை எரிசக்தித் தீவுகளாக' (Green Energy Islands) மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை

02ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மாநகர முதல்வர் பதவி நீக்கம்
## ஆளுநரின் வர்த்தமானிக்கான இடைக்காலத் தடை நீடிப்பு

(வவுனியா)

வவுனியா மாநகர சபை முதல்வரைப் பதவியிலிருந்து நீக்கி ஆளுநரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக் காலத் தடையுத்தரவை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நீடித்து வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வவுனியா மாநகர சபை முதல்

15ஆம் பக்கம் பார்க்க

## நீர்கொழும்பு மாநகர முதல்வர் பதவி விலகல்

(நீர்கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீர்கொழும்பு மாநகர சபையின் முதல்வர் ரொபர்ட் ஹின்கெந்த தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில்
## புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப்பணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் (அ) பகுதி கணேஸ் திட்டத்திலுள்ள தனியார் காணியில் விடுதலைப் புலிகளின் புதையல் இருப்பதாகத் தெரிவித்து அகழ்வுப் பணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.


குறித்த தனியார் காணியில் விடுதலைப்புலிகளின்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரோகரா கோஷத்துடன் கதிர்காமக் கந்தனுக்கு கொடியேற்றம்



(கொழும்பு)

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மீகப் பூமியும், மத நல்லிணக்கத்தின் பிரசித்தி பெற்ற திருத்தலமுமாகிய கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா நேற்றுப் புதன்கிழமை (15) மாலை 6.00 மணியளவில் கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது.

வழமைபோல கொடிக்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டு, கதிர்காம ஆலய வளாகத்திலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற பால்குடிபாவா பள்ளிவாசலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நான்கு முக்கிய சமயத் தலைவர்களின் ஆசியுரைகளுடன், பள்ளிவாசல் வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் 'அரோகரா' பக்தி கோஷ முழக்கங்களுக்கு மத்தியில் புனிதக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கொடியேற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பக்திப் பரவசத்துடன் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இத்திருவிழாவை முன்னிட்டு, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் காடுகள் மற்றும் கரடுமுரடான வழியூடான புனித பாதயாத்திரையை மேற்கொண்ட பக்தர்களில் முதலாம் குழுவினர் நேற்று அதிகாலை கதிர்காமத் திருத்தலத்தை வந்தடைந்தனர். கடந்த 10ஆம் திகதி உகந்தை மற்றும் குமண தேசிய பூங்காவிலிருந்து யால ஓயா ஊடாக கதிர்காமம் வரையான காட்டுப்பாதை பக்தர்களின் வழிபாட்டிற்காகத் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டிருந்தது. (ம-7)

## எதிர்க்கட்சி...

நீதித்துறை சீர்திருத்த முன்மொழிவுகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற சிறைச்சாலை வன்முறைச் சம்பவம் தொடர்பில், ஜனநாயக மக்கள் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு தலைமையகத்திற்குச் சென்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்சை சந்தித்து மனு ஒன்றைக் கையளித்துள்ள னர்.

இந்தச் சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தலதா அத்துகோரள, பிரேமநாத் சி.தொலவத்த, அசாத் சாலி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் உள்ளிட் டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பினை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இலங்கையில் எவரும் இவ்வா றான மாற்றத்தைக் கோர வில்லை. சட்டத்தரணிகள், சிவில் சமூகத்தினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எந்தவொரு வெளிப்படைத்தன்மையுமின்றி அரசு முன்னெடுக்கும் இந்த முயற்சியின் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன?

மேலும், "அரசமைப்பின் 12(1) பிரிவின் கீழ் வரும் சமத்துவக் கோட்பாட்டுக்கு முரணாக, நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பதவிக்காலத்தை நீடிக்க அரசு முனைகின்றது.

நாட்டில் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காது, வீணான குழப்பங்களை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாக உள்ளது என அவர் குறிப்பிட்டுள் ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சுரேன் ராகவன், சம்பவம் நடந்து 10 நாட்கள் கடந்தும், இதுவரை இடைக்கால அறிக்கை கூட வெளியிடப்படவில்லை.இது துரதிர்ஷ்டவசமானது.

கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் தோட்டாக்கள் போன்ற குறைந்தபட்ச பலப்பிரயோக முறைகளைக் கையாண்டிருக்க வேண்டும்.

இந்த வன்முறையில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். தண்டனை வழங்கப்படாத நிலையில், இவர்களின் 'வாழும் உரிமை' பறிக்கப்பட்டுள்ளது.

இது ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சட்டத்துக்குப் புறம்பானதாகும். முறைமை மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் அனுபவமற்ற நிர்வாகமே தற்போதைய நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஜனநாயகக் கட்டமைப்புக்குள் நின்று, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசுக்கு 'இதுவே போதும்' என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இரண்டு...

காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது.

நேற்றைய அகழ்வின் போது புதிதாக 2 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவை இரண்டும் சிறு குழந்தைகள் உடையதாகும். அதேவேளை இரண்டு என்புக்கூட்டு குவியல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் நேற்று என்புக் கூடுகள் எவையும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் இதுவரையில் 87 நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 414 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 409 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## 'பசுமை எரி...

விடுத்துள்ளார்.

வலுசக்தி அமைச்சின் 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு முந்தைய கலந்துரையாடல், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (15) காலை ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

மேலும் குறித்த தீவுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமை (HRES) திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்த பின்னரே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில், 2026 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் கீழ் மேறகொள்ளப்படும் திட்டங்கள், இந்த ஆண்டு நிறைவு செய்யப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான நிதித் தேவைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. மேலும், பொருளாதார நெருக்கடியால் இடைநடுவில் நிறுத்தப்பட்ட ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) உதவி பெற்ற எரிசக்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.(ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி தேவராஜா தனலட்சுமி (தனம்)
(ஆவரங்கால்)



பிறப்பு 22 - 02 - 1954
இறப்பு 13.07.2026

யாழ். ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட தேவராஜா தனலட்சுமி (தனம்) அவர்கள் கடந்த 13.07.2026 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தேவராஜாவின் (சரசாலை) அன்பு மனைவியும் லமீர்தா, (லண்டன்), தேனுகா (லண்டன்), இராஜதேவ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரதீப் (லண்டன்) இன் பாசமிகு மாமியும் ரிஷானின் (லண்டன்) அம்மம்மாவும் பரமேஸ்வரன் (லண்டன்), பாலசிங்கம் (லண்டன்), குகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனிமொழி (லண்டன்), சுபாஜினி (லண்டன்), கோபால கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனியும் சஜீவன் (லண்டன்), ஜனனி (லண்டன்), யாழினி (லண்டன்), கரிஸ் (லண்டன்), செலினா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கவிதா, பகீரதி, கிருஷ்ணகாந்தன் ஆகியோரின் பெரியம்மாவும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், கமலாம்பிகை, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் திருக்குமரன் (லண்டன்), திருமகள் (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஆறுமுகநாதன், மகேந்திரன் மற்றும் இந்துமதி (கனடா), தேவநாதன் (நெதர்லாந்து), ஆனந்தி, தெய்வீகநாதன் (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2026) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்.

தகவல்:- பரமேஸ்வரன் (00447305003007) சகோதரன்
பாலசிங்கம் (0094762011316 சகோதரன்
இராஜதேவ் (00447449643336) - மகன்
லமீர்தா (00447483430112) - மகள்

(C-6052)



# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும்
வட மாகாண கிராம அபிவிருத்தித்
திணைக்களத்தின் வலிகாமம்
வடக்கு - தெல்லிப்பழை பிரதேச செயலக
மகளிர் அபிவிருத்தி நிலையத்தின்
தையற் போதனாசிரியருமான
திருமதி சிறிகாந்தன் இந்திராதேவி
அவர்களின் அன்புத் தாயார்

அமரர் நல்லலிங்கம் தனலட்சுமி

தோற்றம் : 31.08.1943 இறப்பு : 14.07.2026

அவர்கள் 14.07.2026ம் திகதியன்று காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது குடும்பத்தினரது துயரில் பங்குகொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்:-
யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள
உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(8061)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் முதன்முறையாக
# ஏ.ஐ உதவியுடன் சத்திர சிகிச்சை

(கொழும்பு)

**ஏ.ஐ உதவியுடன் கூடிய ரோபோடிக் சத்திர சிகிச்சைகள் முதன் முறையாக இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

50 வயதுடைய பெண்ணொருவரின் கருப்பை அகற்றப்பட்டமை மற்றும் சிக்கலான சிறுநீரக சத்திர சிகிச்சை என இரண்டு சத்திர சிகிச்சைகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ரோபோடிக் முறை தானாக இயங்காது. மாறாக சத்திர சிகிச்சை நிபுணரின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கும்.

நிபுணர்கள் விசேட இயக்கம் மூலம் ரோபோவின் கைகளை இயக்கி, துல்லியமான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர்.

இந்த நவீனத் தொழில்நுட்பத்தினால் இரத்த இழப்பு குறைதல், சிறிய கீறல்கள், தொற்று அபாயம் குறைதல் மற்றும் சத்திர சிகிச்சை பிழைகள் குறையும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர் (நி)

# எஸ்.பி.திசாநாயக்கவின் சகோதரர் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவின் சகோதரரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஜெயலத் பண்டார திசாநாயக்க, பணச்சலவை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய பகுதியில் கலால் வரி உரிமம் வழங்குவதாகக் கூறி ஒருவரிடம் இருந்து ரூ. 2,750,000/ மோசடி செய்யப்பட்டது தொடர்பாக மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு கிடைத்த புகாரின் அடிப்படையில், அதன் நிதி மற்றும் வர்த்தகக் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடங்கியது.

அதன்படி, சம்பந்தப்பட்ட புலனாய்வு அதிகாரிகள், இச் சம்பவம் தொடர்பாக ஜெயலத் பண்டார திசா நாயக்கவை நேற்று முன்தினம் காலை ஹங்குரங்கெத்த பகுதியில் கைது செய்தனர்.

சந்தேக நபர் நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, ரூ.10 மில்லியன் மதிப்புள்ள இரண்டு பிணைதாரர்கள் மற்றும் ரூ 50,000 ரொக்கப் பிணையின் பேரில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது. (நி)

# கட்டுமானத்துறை நிபுணர்களுக்கான தேவை அதிகரிப்பு
## பிரதி அமைச்சர்

(கொழும்பு)




நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் துரித அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, கட்டுமானத் துறையில் தொழில் நிபுணர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாக பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

நிலவும் கடும் தொழில் நிபுணர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக, எதிர்வரும் ஆண்டில் கட்டுமானத்துறையில் 10,000 இற்கும் மேற்பட்ட தொழில் நிபுணர்களை வெளிநாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியிலும் அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ள பிரம்மாண்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக, வெல்டிங் நிபுணர்கள் மற்றும் மின்னியலாளர்கள் போன்ற திறமையான பணியாளர்களைக் கண்டறிவது தற்போது சவாலாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற பிராந்திய நாடுகளைக் காட்டிலும், தெற்காசியாவில் மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார். (நி)

# புகையிலை உள்ளடங்கிய வெற்றிலை விற்பனைக்கு விரைவில் தடை



(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் வாய் புற்றுநோய் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புகையிலை கலந்த வெற்றிலையை விற்பனை செய்வதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் பதிவாகும் புற்றுநோய் வகைகளில் வாய் புற்றுநோய் முன்னணியில் உள்ள நிலையில், இதனைத் தடுக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் எம்.ஏ. சி.பிரசாத் தெரிவித்துள்ளார்.

புகையிலை கலந்த வெற்றிலையைப் பயன்படுத்துவது வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.


இலங்கையின் தற்போதைய சட்டங்களின்படி, புகையிலை கலந்த வெற்றிலையை விற்பனை செய்தல், விநியோகித்தல், தம்வசம் வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காகக் காட்சிப்படுத்துதல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும் நாடளாவிய ரீதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எனவே, பொதுமக்களும் வர்த்தகர்களும் இந்த விடயம் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும், சட்ட விரோதமான முறையில் புகையிலையை வெற்றிலையுடன் கலந்து விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (நி)

# 71 ஆயிரத்தைக் கடந்தது டெங்கு பாதிப்பு

(கொழும்பு)



இலங்கையில் இந்த ஆண்டில் நேற்று முன்தினம் வரை பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 71,000 ஐத் தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள தற்போதைய புள்ளி விவரங்களின்படி, நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 71,235 டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளதுடன், டெங்கு தொற்று காரணமாக 49 மரணங்களும் சம்பவித்துள்ளன.

நோய்த்தொற்றின் தொடர்ச்சியான பரவலை வெளிப்படுத்தும் வகையில், ஒரே நாளில் மட்டும் புதிதாக 1,284 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி)

# 90 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் 6 மாதங்களில் மீட்பு

(கொழும்பு)

இலங்கை கடலோரக் காவல்படை, இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 90 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் பெறுமதியான போதைப்பொருட்கள் மற்றும் சட்டவிரோதப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளது.

"முழு நாடும் ஒன்றாக" என்ற திட்டத்தின் கீழ், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான நாடு தழுவிய நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக இலங்கை கடலோரக் காவல்படை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்படி, தொடர்புடைய தரப்பினர் மற்றும் சட்ட அமுலாக்க முகமைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, 2026-ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பெருமளவிலான சட்டவிரோதப் பொருட்களும் சரக்குகளும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களில் ஹெரோயின், ஐஸ், ஹஷிஷ், குஷ் உள்ளிட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டில் பயிரிடப்பட்ட கஞ்சா, சட்டவிரோத போதை மாத்திரைகள், வெளிநாட்டு சிகரெட்டுகள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானம், பீடி இலைகள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பீடி ஆகியவை அடங்கும்.

இவற்றின் மொத்தச் சந்தை மதிப்பு 90 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மொத்தம் 78 பேர் இச் சோதனைகளின்போது கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் மற்றும் சட்டநடவடிக்கைகளுக்காகச் சட்ட அமுலாக்கத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நாடு முழுவதும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோகத்தைத் தடுப்பதற்கான தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இத்தகைய சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்று கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

### உலக கிண்ண கால்பந்து

# 16 வருடங்களிற்கு பிறகு இறுதிப்போட்டிக்கு நுழைந்த ஸ்பெயின்



உலகக் கிண்ண கால்பந்து அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸை வீழ்த்தி ஸ்பெயின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் டலாஸில் தொடங்கிய விறுவிறுப்பான ஆட்டத்தில் பிரான்ஸ் - ஸ்பெயின் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் தீவிரத்துடன் விளையாடின.

ஸ்பெயின் சார்பில் ஓயர்சபல் ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பில் ஒரு கோல் அடித்தார்.

இதனால் ஸ்பெயின் அணி 1 -0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. பிரான்ஸ் அணி தொடர்ந்து முயன்றாலும் அதனால் கோல் அடிக்க முடியவில்லை.

ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் 58 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெட்ரொ பேரோ அணியின் இரண்டாவது கோலை பதிவு செய்தார்.

பிரான்ஸ் தீவிரமாக முயன்றும் கடைசி வரை கோல் அடிக்க முடியாது போனது. ஆட்ட நேர முடிவில் 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்பெயின் உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. அப்போது, நெதர்லாந்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் பட்டம் வென்றது.

மறுபுறம், 2018 மற்றும் 2022 இற்குப் பிறகு, தொடர்ந்து மூன்றாவது முறையாக இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பிரான்ஸ் தவறவிட்டுள்ளது. (3)

### முதலாவது ஒருநாள் தொடர்

## இங்கிலாந்தை வீழ்த்தி தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்த இந்தியா



பர்மிங்காமின் எட்ஜ்பாஸ்டனில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டத்தில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

இதன் மூலம், சர்வதேச கிரிக்கெட்டில் தங்கள் தோல்விப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த இந்திய அணி தற்போது தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாட்டம் செய்யத் தீர்மானித்த இங்கிலாந்து அணி, 48 ஆவது ஓவரில் 258 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் அதிகபட்சமாக 76 ஓட்டங்களைக் குவித்தார். லியாம் டாசனும் முக்கியப் பங்காற்றி 68 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தியத் தரப்பில், அக்சர் படேல் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் சேஸிங்கில் இந்திய அணி, தலைவர் ஷீப்மன் கில்லின் 80 ஓட்ட உதவியுடன் (பின்னர் காயத்தால் ஆட்டத்திலிருந்து வெளியேறினார்) 46 ஆவது ஓவரிலேயே அந்த இலக்கை எளிதாக எட்டியது.

மேலும், வொஷிங்டன் சுந்தர் மற்றும் அக்சர் படேல் ஆகிய இருவரும் அரை சதம் கடந்து, ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

சிறப்பான ஆல்-ரவுண்ட் ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக அக்சர் படேல் 'ஆட்ட நாயகன்' விருதை வென்றார். (3)

## வல்லை கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி

### நேதாஜி கழகம் சம்பியன்

வல்லை விளையாட்டுக் கழகத்தின் அனுமதியுடன் வல்லை நேதாஜி விளையாட்டு கழகம் நடத்திய வல்லைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டியில் வல்லை நேதாஜி விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வல்லை விளையாட்டுக் கழகத்தின் அனுமதியுடன் வல்லை நேதாஜி விளையாட்டுக் கழகம் நடத்திய வல்லைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி அண்மையில் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நேதாஜி அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது. இதில் நேதாஜி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொலித்தீன் பைகள் மீதான கட்டணத்தை முறையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பொலித்தீன் பைகள் மீதான கட்டணத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யுமாறு, மத்திய சுற்றாடல் அதிகார சபையை இலங்கை சூழலியல் நடவடிக்கை வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பல்பொருள் அங்காடிகள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சிறு வணிகங்கள் மத்தியில் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முரண்பாடுகள், குறித்த கொள்கையின் நோக்கத்தையே பாதிப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பொலித்தீன் பயன்பாட்டைக் குறைப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொலித்தீன் பை கட்டண முறையை வரவேற்கும் அதேவேளை, பல வணிக நிறுவனங்கள் இதுவரை இலவசமாகவே பொலித்தீன் பைகளை வழங்குவதாக அல்லது சீரற்ற முறையில் கட்டணத்தை அறவிடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தாத வணிக நிறுவனங்கள் மீது, மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலித்தீன் பைகளுக்கான கட்டணத்தின் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்து பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும், துணிப்பைகள் மற்றும் மக்கும் தன்மை யுடைய பைகள் போன்ற சூழல் நட்பு மாற்றுகளைப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொலித்தீன் மாசுபாடு இலங்கையின் ஆறுகள், கடற்கரைகள், வனவிலங்குகள் மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இருப்பதாக அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. (நி)

# கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி.

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சனசமூக நிலைய பவள விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று(16) வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு திருமகள் சன சமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பவளவிழாத் தலைவர் சுதேஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை பணிப்பாளர் மா. இளம்பிறையன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர் சி.தயாளபாலன், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட செயலக ஓய்வுதியர் வே.நல்லையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## சிறைச்சாலை சம்பவம்;

# பக்கச் சார்பற்ற விசாரணையை முன்னெடுக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் மற்றும் கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்ட போது நிகழ்ந்த மரணங்கள் குறித்து, மக்கள் சார் கூட்டு எதிர்க்கட்சி விசேட அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான, நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கடந்த 5ஆம் திகதி மாலைக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், மோதலில் ஈடுபட்ட கைதிகளையும் சிறைச்சாலை அதிகாரிகளையும் தனித்தனியாகப் பிரித்து வைக்க அதிகாரிகள் தவறியமையே நிலைமை மோசமடையக் காரணம் என அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், 6ஆம் திகதி காலை கைதிகள் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளையில், சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களை நோக்கிச் சென்றது, கைதிகளைக் கோபமூட்டும் செயலாக அமைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச பலத்தைப் பயன்படுத்த வாய்ப்புகள் இருந்தும், சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கதவின் துளை வழியாக தானியங்கித் துப்பாக்கியால் சுட்டதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும் என அந்த அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளது.

சிறைச்சாலைக்குள் இவ்வாறான துயரச் சம்பவங்கள் மற்றும் உயிர் இழப்புகள் நிகழ்ந்து வருகின்ற நிலையில், இது குறித்த அவசரக் கூட்டங்களில் கலந்துகொள்வதையோ அல்லது நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு நேரில் சென்று நிலவரத்தைப் பார்வையிடுவதையோ சம்பந்தப்பட்ட நீதியமைச்சர் தவிர்த்திருப்பது மிகுந்த கவலைக்குரியது என மக்கள் சார் கூட்டு எதிர்க்கட்சி தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (நி)


# INVITATION FOR BID2026/10 VALIKAMAM EAST PRADESHIYA SABHA NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB),**To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
   **"Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.**
3. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-07-15 To 2026-07-30** during **09:00 hrs and 15:00 hrs**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026-07- 15 To 2026-07-30 | | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-07-22 | | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2026-07-31 | | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(13) /4/Council / 05/2026/15 | Completing work of Head office Building, Vali East Pradeshiya Sabha | 9.01 | 91 | C8, C7 & C6 (Building) | 4,000.00 | 91,000.00 | 13.11.2026 | 77 |

**Chairman ,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur .**

(C-6049)

❒ This advertisement was scheduled to be published on Wednesday, 15th July 2026. Unfortunately, it could not be published. Therefore, it is being published on 16th July 2026.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரில் கொள்ளையடிக்கப்பட்ட பணம், நகைகளுடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

காரைநகரில் வெளிநாட்டிலிருந்து வருகை தருவோரின் வீடுகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


காரைநகரிலுள்ள வீடொன்றில் 1600 கனேடிய டொலர், ஒரு சோடி காப்பு மற்றும் கடவுச்சீட்டு என்பனவும், மற்றொரு வீட்டில் 400 அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை மதிப்பிலான ஒரு இலட்சம் ரூபா என்பனவும் களவாடப்பட்டன.

இதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய, யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருந்தனர்.

விசாரணையின் அடிப்படையில், காரைநகரைச் சேர்ந்த 20 மற்றும் 26 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து களவாடப்பட்ட பணம், நகை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

## சட்டவிரோத மதுபானப் போத்தல்களுடன் முல்லைத்தீவில் சந்தேகநபர் கைது!




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து சட்ட விரோதமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஐயாயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (8)



யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


## ஆடிப்பிறப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கரியாலை நாகபடுவான் அ.த.க பாடசாலை வளாகத்தில் பிரதேச செயலர் வே.ஆயகுலன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என கலாசார பேரவையினர் அறிவித்துள்ளனர். (8-84)

## அமிர்தலிங்கத்தின் நினைவேந்தல்



(தருமபுரம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (13) கிளிநொச்சியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமிர்தலிங்கத்தின் திருவுருவ படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-316)

## டெங்கு; விழிப்புணர்வு

(கரணவாய்)

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது டெங்கு அறிகுறிகள், டெங்கு நோயின் சிக்கல் நிலைகள் தொடர்பாகவும், டெங்கு நோயினை எவ்வாறு கண்டறிவது டெங்குத் தொற்றில் இருந்து எமது சமூகத்தினை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் விளக்கமளிக்கப்பட்டது. (8-60)

## கிளாலி பாடசாலை - கடற்கரைவீதிப்பாலத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(தருமபுரம்)

அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் வேலைத்திட்டத்தின் கீழ், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி கிளாலி பாடசாலை - கடற்கரை வீதிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

1.2 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ள இப்பாலத்திற்கான அடிக்கல்லை பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நாட்டி வைத்தார்

நாடளாவிய ரீதியில் 1,000 மில்லியன் ரூபா செலவில் 887 கிராமிய பாலங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ள நிலையில், ஆரம்ப கட்டமாக 107 பாலங்களுக்கான பணிகள் பல்வேறு பகுதிகளில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## இணைய வழி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையால் நடத்தப்படும் "இணைய வழி கருத்தரங்கு" எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30மணி முதல் 8.10 மணி வரை நடைபெறும்.

வலிகாமம் மேற்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் வெற்றிவேல் சக்தி வேல் தலைமையில் நடைபெறும் இவ் இலவச கருத்தரங்கில் இணைய விரும்புவோர் 075 5327067 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (8)

## மன்னாரில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



(மன்னார்)

மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள், முப்படையுடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளனர்.

நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு குறித்த டெங்கு பரிசோதனை விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிலையில் அரச அலுவலகங்கள், விடுதிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

டெங்கு நுளம்பு பெருகுவதற்கு காரணமான இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அவற்றை கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படும். அறிவித்தல்களை மீறி டெங்கு நுளம்பின் பெருக்கத்திற்கு உடந்தையாக உள்ள உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் திருமுல்லை யோகா நிலையமும் இணைந்து நடத்திய மாவட்ட மட்ட யோகா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. (படம்: சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வவுனியா பம்பைமடு பங்கின் துணை ஆலயமான சிவபுறம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா நவநாட்கள் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடனும் வழிபாடுகளுடனும் ஆரம்பமாகியது.

# அநுராதபுரத்தில் விபத்து

## இருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தின் மிஹிந்துபுரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற 'சிசு சரியா' பேருந்து மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் பயணித்த நிலையில், அந்த இரண்டு ஆண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பேருந்து ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், விபத்துக்கான காரணம் குறித்து அநுராதபுர போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (நி)

# பதற்றத்தினால் மூடப்பட்ட வான் பரப்பு

## கட்டுநாயக்கவுக்கு திருப்பி விடப்பட்ட விமானங்கள்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நேற்று முன்தினம் இரவு பதற்றம் திடீரென அதிகரித்ததைத் தொடர்ந்து மத்திய கிழக்கின் சில பகுதிகளில் வான் வெளி மூடப்பட்ட நிலையில், குவைத் நகரம் மற்றும் தம்மாம் நோக்கிச் சென்ற ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தின் இரண்டு விமா னங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் UL229 நேற்று முன்தினம் மாலை 5:10 மணிக்கு பஹாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து குவைத் சர்வதேச விமான நிலையத்திற்குப் புறப்பட்டது,

அதேநேரத்தில் விமானம் UL253 மாலை 6:36 மணிக்கு தம்மாமில் உள்ள கிங் ஃபஹாத் சர்வதேச விமான நிலையத்திற்குப் புறப்பட்டது.

இவ்விரு விமானங்களும் ஏர்பஸ் A321neo ரக விமானங்களைப் பயன்படுத்தி இயக்கப்பட்டன.

விமானங்கள் மத்திய கிழக்கை நெருங்கியபோது, ஈரான் அப்பகுதி முழுவதும் தொடர்ச்சியான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து, குவைத்தும் சவூதி அரேபியாவும் தத்தமது வான்வெளிகளைத் தற்கா லிகமாக மூடின.

இந்நிலையில் தத்தமது இலக்குகளுக்கு உடனடியாகச் செல்ல இயலாததால், அந்த இரண்டு விமானங்களும் பாதிக்கப்பட்ட வான்வெளிக்கு அருகே சுமார் ஒரு மணி நேரம் 10 நிமிடங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக வான்வெளி மூடல்கள் காரணமாக, வேறு பல சர்வதேச விமானங்களும் வானில் வட்டமிட்டுக் காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் இரு விமானங்களும் நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு திரும்பி வந்தடைந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## பொது அறிவித்தல்

2415 ஆம் இலக்க 13/12/2024 ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரத்திலுள்ள எமது சபைக்குச் சொந்தமான, சுன்னாகம் நகரம் தெற்கு J/196 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ்காட்டப்படும் வீதியினை பெயர்மாற்றம் செய்யுமாறு அப்பகுதிமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையை கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு

தற்போதைய பெயர்:- சபாபதிப்பிள்ளை 2 ஆம் ஒழுங்கை.
இலக்கம் NJVSE 690 நீளம் 100 மீற்றர். ஆகலம் 6 மீற்றர்.
மாற்றப்படவுள்ள பெயர்:- **தவராஜா JP வீதி**
வீதியின் ஆரம்பம் :- சபாபதிப்பிள்ளை வீதி. வீதியின் முடிவு தனியார் காணி.

எனவே இவ்வீதி பெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 30/07/2026 ஆம் திகதிக்குள் எழுத்துமூலம் **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தி.பிரகாஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-6050)



# இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.
(C-6047)

**074 196 4945, 076 682 7368**
**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி.மேரி அலஸ்ரீனா பகிதரன்**
(B.A(HONS) ,PGDE,M.Ed)
அவர்கள்
தேசிய கல்வி நிறுவகத்தால்
கொழும்பு பண்டார நாயக்கா
ஞாபகார்த்தமண்டபத்தில்
09.07.2026 அன்று
நடாத்தப்பட்ட பட்டமளிப்பு
விழாவில் முதுகல்விமானிப்
(M.Ed) பட்டம்
பெற்றமையிட்டு அவரைப்
பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களைப்
பெறவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்.


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 15 - 11 - 1934



மறைவு 14 - 06 - 2026

கடந்த 14.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர். கந்தையா சின்னத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.07.2026 செவ்வாய்க்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.07.2026 இன்று வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும். (C-6048)


மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மொஜ்தபா கமேனி உயிர் பிழைக்க வாய்ப்பில்லை

## ட்ரம்ப் பரபரப்பு தகவல்



(வோஷிங்டன்)

ஈரானின் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி உயிர் பிழைப்பதற்கு 90 சதவீதம் வாய்ப்பில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஃபாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்தின் நேர்காணலில் பேசிய ட்ரம்ப்,

"ஈரானின் கடற்படை, விமானப்படை என அனைத்தும் அழிந்துவிட்டன, அவர்களின் வான்வழித் தடுப்பு அமைப்புகள் செயலிழந்துவிட்டன எனவும் அவர்களின் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் எனவும் அத்துடன் மொஜ்தபா கமேனி உயிர் பிழைக்க 90 சதவீதம் வாய்ப் பில்லை" எனவும் தெரிவித்தார்.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, அமெரிக்காவின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர், அவரது மகன் மொஜ்தபா கமேனி, புதிய உச்ச தலைவராக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில், அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல் ஒன்றில் மொஜ்தபா கமேனியும் பலத்த காயமடைந்ததாகவும், தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதன்காரணமாக, ஈரான் மற்றும் ஈராக்கில் கடந்த வாரம் நடைபெற்ற அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கு நிகழ்வில் கூட அவர் கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில், மொஜ்தபா கமேனி 90 சதவிகிதம் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று ட்ரம்ப் தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)

# ஹார்முஸ் நீரிணை

# மூடப்படும் பாப் எல்-

## உலகை மிரட்டும் ஈரான

(டெஹ்ரான்)

**ஹார்முஸ் நீரிணை வழியாக ஏற்கனவே கப்பல் போக்குவரத்தை முடக்கியுள்ள ஈரான், தற்போது தனது அடுத்த ஆபத்தான வியூகத்தை கையில் எடுத்துள்ளது.**



ஏமனில் உள்ள தனது ஆதரவு பெற்ற ஹூதி கிளர்ச்சியாளர்களைப் பயன்படுத்தி, செங்கடலின் நுழைவாயிலான "பாப் எல்-மண்டேப்" நீரிணையை மூடப்போவதாக ஈரான் எச்சரித்துள்ளது.

வோஷிங்டனுக்கு எதிராக ஒரு புதிய போர்க்களத்தைத் திறப்பதன் மூலம், உலகின் மிக முக்கியமான இரண்டு எரிசக்தி வழித்தடங்களையும் ஒரேநேரத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்க ஈரான் முயன்று வருகிறது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹூதி அமைப்பின் அரசியல் பிரிவு உறுப்பினர் முகமது அல்-ஃபராஹ் விடுத்துள்ள எச்சரிக்கையில், "நிலைமை மேலும் மோசமடை ந்தால், பாப் எல்-மண்டேப் நீரிணை யும் ஹார்முஸ் நீரிணையும் கூட்டு கூட்டணியின் மூலம் மூடப்படும்.

இதனால் மசகு எண்ணெய் விலை பெரலுக்கு 200 டொலராக உயர்ந்து உலகப் பொருளாதார த்திற்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும்" என்று

# உலக கிண்ண அரையிறுதி சுற்றில் தோல்வி

# பிரான்சில் வெடித்தது கலவரம்



(பாரிஸ்)

உலகக் கிண்ண அரையிறுதியில் பிரான்ஸ் அணி தோற்றதைத் தொடர்ந்து அந் நாட்டில் கலவரம் வெடித்துள்ளது.

உலகக் கிண்ண கால்பந்து தொடரின் முதல் அரையிறுதிப் போட்டி நடந்து முடிந்துள்ளது. ஸ்பெயின் - பிரான்ஸ் இடையே நடைபெற்ற போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வெற்றி பெற்றது.

கடந்த உலகக் கிண்ணத் தொடரில் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பிரான்ஸ் அணி, இம்முறை அரையிறுதியில் தோற்று வெளியேறியது. ஸ்பெயின் அணியின் சிறப்பான தடுப்பாட்டம், பிரான்ஸ் அணியின் திட்டமிடலின் போதாமை போன்ற காரணங்களால் இந்தப் போட்டியில் பிரான்ஸ் தோற்றது.


பிரான்ஸ் அணியின் தோல்விக்குப் பின்னர் அந்நாட்டின் பல நகரங்களில் கலவரம் வெடித்துள்ளது. தோல்வியால் அதிருப்தியடைந்த ரசிகர்கள் காவல்துறையினருடன் மோதலில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து வாகனங்களைச் சேதப்படுத்தி, பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர்.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் நகரிலும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. காவல்துறையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி கலவரத்தில் ஈடுபட்டவர்களைக் கலைத்தனர். இதன்மூலம், அங்கு பதற்றம் சற்று அதிகரித்தது. (3)

# அசோவ் கடலில் உக்

# கடும் நெருக்கடி

(மொஸ்கோ)



ரஷ்யாவின் தானிய ஏற்றுமதியில் கால் பகுதிக்கும் மேல் கையாளும் முக்கிய வழித்தடமான அசோவ் கடலில், உக்ரைன் தொடர்ந்து கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

உக்ரைனின் ட்ரோன் படைகள் ஒரே இரவில் 5 எண்ணெய் டாங்கர்கள் மற்றும் 5 சரக்குக் கப்பல்கள் உட்பட 11 ரஷ்ய கப்பல்களைத் தாக்கியுள்ளதாக உக்ரைன் தரப்பு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் கடந்த ஒன்பது நாட்களில் மட்டும் அசோவ் கடலில் உக்ரைனால் தாக்கப்பட்ட ரஷ்ய கப்பல்களின் எண்ணிக்கை 116 ஆக உயர்ந்துள்ளது.


இந்த தொடர் தாக்குதல்களால் அசோவ் கடலில் கப்பல் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் இந்த நடவடிக்கையைக் கடுமையாக விமர்சித்துள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், இது கடற்கொள்ளையர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

# ணையை அடுத்து மண்டேப் நீரிணை!

## னின் அடுத்த வியூகம்



கூறியுள்ளார்.

சவுதி அரேபியாவின் மசகு எண்ணெய் ஏற்றுமதி மற்றும் உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் பெரும்பகுதி இந்த பாப் எல்-மண்டேப் வழியாகவே நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் இந்த நகர்வு, போரை இரு நாடுகளுக்கு இடையேயான மோதலாக மட்டும் வைக்காமல் உலகளாவிய பொருளாதார நெருக்கடியாக மாற்றும் ஒரு தந்திரம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினால், ஈரான் தனது இறுதி ஆயுதமாக இதைப் பயன்படுத்தக்கூடும் என்று எச்சரிக்கப்படுகிறது.

அதேநேரத்தில், ஹூதிகள் இந்த எல்லையைத் தாண்டினால், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் அவர்கள் மீது இன்னும் கடுமையான கூட்டு இராணுவத் தாக்குதலை நடத்தக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (3)

## பெல்ஜியத்தில் அடுக்குமாடி கட்டிடத்தில் பயங்கர தீ விபத்து

### 6 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(பிரஸ்ஸல்ஸ்)

பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரஸ்ஸல்ஸ் நகரின் மையப்பகுதியில் கட்டுமானப் பணியிலிருந்த அடுக்குமாடிக் குடியிருப்புக் கோபுரக் கட்டடத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலை சுமார் 8 மணியளவில் இந்தக் கட்டடத்தில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை விரைவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும், தீயானது கட்டடத்தின் மின்தூக்கி பகுதிக்குள்ளும் பரவியதைக் கண்டறிந்துள்ளனர்.


இதன்போது இரு மின்தூக்கிகள் இயங்க முடியாமல் சிக்கியிருந்தன.

பல மணிநேரம் நீடித்த மிகக் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் ஒரு மின்தூக்கியை உடைத்துத் திறந்து பார்த்த போது, அதற்குள் 6 உடல்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டன.

தீ விபத்துக்கான துல்லியமான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்தத் துயரச் சம்பவத்தை அடுத்து, பெல்ஜியத்தின் பிலிப் மன்னர் மற்றும் பிரதமர் பார்ட் டி வெவர் ஆகியோர் பிற்பகலில் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று நிலைமையை ஆய்வு செய்துள்ளனர். (3)



## க்ரைன் கைவரிசை; கடியில் ரஷ்யா



டவும் மோசமான, பயங்கரவாதம் என்று சாடியுள்ளார்.

சேதத்தை ஏற்படுத்தி மக்களை அச்சுறுத்துவதே க்ரைனின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள உக்ரைன் ராணுவம், தாங்கள் ரஷ்யாவின் போர்த்திறனை வலுப்ப த்தும் இராணுவ இலக்குகளை மட்டுமே தாக்குவ கவும், பொதுமக்கள் மற்றும் சிவிலியன் உள் கட்ட மப்புகள் மீது ரஷ்யா நடத்தும் தாக்குதல்களை சைதிருப்பவே இத்தகைய குற்றச்சாட்டுகளை ரஷ்யா ன்வைப்பதாகவும் தெரிவித்துள்ளது. (3)

## சூடான் தங்க வர்த்தகத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை

(கார்ட்டூம்)


சூடானில் தொடர்ந்து நீடித்து வரும் இராணுவ மோதல்களுக்கு நிதி திரட்டுவதைத் தடுக்கும் நோக்கில், அந்நாட்டின் தங்க வர்த்தகத்தை இலக்கு வைத்து புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த புதிய முடிவின்படி, சூடானை பூர்வீகமாகக் கொண்ட தங்கம் எதையும் வாங்குவதற்கோ, இறக்குமதி செய்வதற்கோ அல்லது கைமாற்றுவதற்கோ முழுமையான தடைவிதிக்கப் பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி, தங்கம் பிரித்தெடுக்கப் பயன்படும் பாதரசம் மற்றும் சயனைடு ஆகிய வேதிப் பொருட்களைச் சூடானுக்கு விற்பனை செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் அல்லது ஏற்றுமதி செய்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளது.


சூடான் நாட்டின் அதிகாரப்பூர்வ இராணுவத்திற்கும், துணை இராணுவப் படையான "விரைவு ஆதரவுப் படைகளுக்கும்" இடையே கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இந்த கொடூரமான உள்நாட்டுப் போர், அந்நாட்டில் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழலில், போருக்கான முக்கிய நிதி ஆதாரமாக விளங்கும் தங்க வர்த்தகத்தை முடக்குவதன் மூலம் அங்கு வன்முறையைக் குறைக்க முடியும் என்று ஐரோப்பிய ஒன்றிய பேரவை தெரிவித்துள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மகிழங்காடு கமக்காரர் அமைப்பின் நெற்களஞ்சிய சாலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் வட மாகாண பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர் மருங்கன் மோகன், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் ஒரு மூட்டை நெல் 8450 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

குறித்த நெல் கொள்வனவு தொடர்ச்சியாக அனைத்து விவசாயிகளிடமும் கொள்வனவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
12இல்செவ்
கி-பா- 35
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L,Shop(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17099

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:அத்தம்
1இல்சூரிசெவ்
கி-பா-29
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L, Accountant (மில்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17100

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: A/L, கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16318

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்:விசாகம்
12இல் செவ்
கி-பா-36
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L, விற்பனை உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15607

பிறப்பு: 1979- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா- 13 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/15608

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
7இல்செவ்
கி.பா: 41 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc ,Msc,ESO
எதிர்பார்ப்பு: உத்தியோகம், விவாகரத்தானவர்
தொ.இ: G/16236

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா-26 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in English ,தையல்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/16452

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1இல்செவ்
உயரம்-5'4"
தகைமை/தொழில்: Degree,Swiss
எதிர்பார்ப்பு: Swiss,German
தொ.இ: G/16364

பிறப்பு:2002-இந்து
நட்சத்திரம் : பூரம்
11இல்சூரிசெவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்- A/L, Makeup
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16319

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: சுவாதி
2இல்செவ்
கி.பா: 58 1/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS,DOCTOR
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/14678

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 617

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மாறுவது மனம்!

ஒருவர் மிகவும் மகிழ்ச்சியாக வந்து கொண்டிருந்தார். "என்ன விஷயம்?" என்று விசாரித்தேன். "நான் தோற்றுப் போய் விட்டேன். அதுதான் மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது!" என்றார்.

எனக்கு வியப்பாக இருந்தது. இந்த உலகத்தில் தோற்றுப் போகிறவர்கள் யாரும் மகிழ்ச்சியாக இருப்பது உண்டா? "எங்கே தோற்றுப் போனீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் விவரமாகச் சொன்னார்.

"என்னுடைய ஐந்து வயது குழந்தையுடன் நான் விளையாடிக் கொண்டிருந்தேன். அந்த விளையாட்டில் என் குழந்தை ஜெயித்து விட்டது. நான் தோற்றுப் போய் விட்டேன்." என்றார் மிகவும் உற்சாகமாக. நான் யோசித்துப் பார்த்தேன். நாம் சின்னக் குழந்தையாக இருந்த போது எந்த விளையாட்டில் கலந்து கொண்டாலும் அதில் நாம் தான் ஜெயிக்க வேண்டுமென்ற ஒரு வெறி நமக்குள்ளே இருக்கும் .

நம்மை எதிர்த்து விளையாடுபவர் நல்லவரா-கெட்டவரா, பெரியவரா - சின்னவரா என்பதெல்லாம் முக்கியமில்லை. அவர் தோற்றுப் போக வேண்டும் . அது தான் முக்கியம். எதிரியை சந்தோஷப்படுத்த விளையாடும் கலை அப்போது நமக்குத் தெரிவதில்லை! வாழ்க்கையில் ஒரு பக்குவம் வந்த பிறகு வெற்றி பெற வேண்டும் என்ற மன அழுத்தம் போய் விட்டது.

போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்பதை விட, குழந்தையை சந்தோஷப்படுத்த வேண்டும் என்பது முக்கியமாகி விட்டது. ஜெயிக்க வேண்டும் என்ற வெறி ஓடிப் போய் விட்டது.

ஒரு குழந்தையாக இருந்த போது நம் வளர்ச்சிக்கு உதவிய வெற்றி, வெறி, பெரியவனாக ஆன பிறகு நமக்கு எதிரியாக மாறுகிறது. அதைச் சரியான சமயத்தில் உணர்ந்து கொண்டால் போதும். நாம் பிழைத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனுமே வாழ்வின் அடுத்தக்கட்ட வளர்ச்சியில் அடியெடுத்து வைக்கும் நேரத்தில், தன்னிட மிருந்து ஏதோ ஒரு குணத்தை அல்லது தன்னுடன் இருந்த ஏதோ ஒரு உறவை இழக்கத்தான் வேண்டியுள்ளது.! என்கிறார். உலகப்புகழ் பெற்ற உளவியல் மேதை எம். ஸ்காட்பெக். ஒரு கட்டம் வரைக்கும் உதவியாக இருக்கிற குணம் அடுத்த கட்டத்திற்குத் தடையாக கூட மாறி விடலாம் என்கிறார் அவர். இந்தப் பரிமாண மாற்றத்துக்கு உள்ளாகும் ஒவ்வொருவரும் பிரத்யட்சமாக இதை உணர்கிறார்கள்.

ஆனால் பல பேர் எப்படி என்றால், பழையதைத் துறந்து விட்டு புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள இஷ்டமில்லாமல் இருந்து விடுகிறார்கள். அல்லது அப்படிச் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள்.

இதையெல்லாம் மீறி அந்தப் பழையதைத் துறந்து விட்டால் . அதை இழந்ததால் உண்டாகும் மனஅழுத்தம் சில காலத்துக்கு வருத்திக் கொண்டுதான் இருக்கும்" வேறு வழி இல்லை.

ஆரோக்கியமான ஒரு முன்னேற்றத்திற்காக அந்த மன அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறார் ஸ்காட்பெக். பிறந்த நாள் முதல், இதுதான் சரி என்று கற்பிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு தத்துவத்தையும் தங்களின் வளர்ச்சிக்குத் தகுந்த மாதிரி மாற்றி அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாமல். வாழ்க்கைச் சூழலில் அரைபட்டு தூளாகிறவர்கள் தான் ரொம்பத் தவிக்கிறார்கள்.

பெரும்பாலும் மனிதர்களின் நடுத்தர வயதில் முப்பதைத் தாண்டும் சமயத்தில்தான் இந்த தவிப்பு உண்டாகிறது. இதைத்தான் மேற்கத்திய நாடுகளில் அடிக்கடி Mid-Life Crisis என்று சொல்கிறார்கள்.

அவ்வப்போது பழையதையெல்லாம் தொலைத்துவிட்டு புதிது புதிதாகப் பிறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நிமிடத்தையும் அந்த நிமிடத்துக்கு ஏற்ற சித்தாந்தம் கொண்டவர்களாகச் சந்திப்போம் என்கிறார் அந்த உளவியல் நிபுணர். அப்படிப் பழகிக் கொண்டால் வாழ்க்கை இன்பமயம். இல்லையென்றால் தவிப்பு மயம் தான்!

பழையதை தொலைக்க முடியாதவர்களில் எத்தனையோ ரகம் உண்டு. ஒருத்தர் நண்பர் வீட்டுக்குப் போனார். அவர் ஏதோ இனிப்புப் பலகாரம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். இவர் சாப்பிட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"சேர். ஆறுமாதத்திற்கு முன்னர் ஒரு தடவை இங்கே வந்தேன். அப்போது ஒரு இனிப்பு பலகாரம் கொடுத்தீர்கள் அது இதைவிட நல்லா இருந்தது சேர்" என்றார். "அப்போது செய்த அதே இனிப்புப் பலகாரம் தான் சேர் இதுவும்". என்றார் இவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு தலைக்கவசம் அவசியம்

# பெற்றோர்களுக்கு ஒருவார காலம் அவகாசம்

## வவுனியா பொலிஸ்நிலைய போக்குவரத்து பிரிவு உத்தரவு!

**(வவுனியா) பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்லும் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளுக்குக் தலைக்கவசம் அணிவிக்க வேண்டும் என வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு உத்தரவு பிறப்பித்துள்ளது.**



வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க தலைமையில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்றைய தினம் விசேட விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போதே வவுனியா பொலிஸ் நிலைய போக்கு வரத்து பிரிவு பொறுப்பதிகாரி இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் பதிவாகின்றன.

இதில் தலைக்கவசம் அணி யாமல் பயணிக்கும் சிறுவர்கள் பாரிய தலைக் காயங்களுக்கு உள் ளாகி, உயிரிழக்கும் அல்லது நிரந்தரப் பாதிப்புக்குள்ளாகும் சம்ப வங்கள் அதிகரித்துள்ளன.

இலங்கையின் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின்படி, மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் ஓட்டுநர் மட்டுமன்றி, பின்னால் பயணிக்கும் நபரும் (அவர் சிறுவராக இருந் தாலும்) தரச்சான்றிதழ் பெற்ற தலைக் கவசத்தை அணிவது கட்டா யமாகும்.

அத்துடன் இலங்கையில் பதி வாகும் மொத்த வீதி விபத்துக்களில் 40 வீதத்துக்கும் அதிகமானவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகவே உள் ளன.

இதன் காரணமாகவே வவுனியா போக்குவரத்து பொலிஸார் இந்த விசேட அதிரடிப் பரிசோதனையை யும் விழிப்பு ணர்வையும் ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவடையும் நேரங்களில் இந்த விசேட கண்காணிப்பு நடவடிக் கைகள் தொடரும்.

எனவே இன்று முதல் (நேற்று) ஒரு வார காலத்திற்குள் மோட்டார் சைக் கிள்களில் அழைத்து வரப்படும் அனைத்துச் சிறு வர்களுக்கும், பாடசாலை மாண வர்களுக்கும் பிரத்தியேகத் தலைக்கவசம் அணிவிக்கப்பட வேண்டும்.

இந்த ஒரு வார கால அவகாசம் நிறைவடைந்த பின்னர், விதியை மீறும் பெற்றோர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (8)

# 'கருத்தம்மா' திரைப்படக்காட்சி!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மறைந்த பாரதிராஜாவின் நெறியாள்கையில் உருவான "கருத்தம்மா" திரைப் படம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவுள்ளது. யாழ்ப்பாண த்திரைப்படக் கழகம் இலவசக் காட்சியாக இதனை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | மட்டுவில் ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 900 | 600 | 900 | 1000 |
| தக்காளி | 500 | 500 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 200 | 300 | 280 | 180 |
| கரட் | 350 | 400 | 350 | 350 |
| பூசணி | 240 | 200 | 150 | 180 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 140 | 250 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 200 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 700 | 800 | 700 | 500 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 400 | 300 | 350 | -- |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 350 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 400 | 500 | 400 | 350 |
| கறிமிளகாய் | 500 | 400 | 400 | 550 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 450 |
| போஞ்சி | 450 | 500 | 400 | 400 |
| தம்புள்ள-கத்தரி | 250 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 30 | -- |
| தேசிக்காய் | 250 | 400 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 120 | -- |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | -- |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | -- |
| வல்லாரை | 70 | 100 | -- | -- |
| ஈரப்பலா | 200 | 100 | -- | -- |

# இராசிபலன்

'16.07.2026
ஆனி 32, வியாழக்கிழமை
துதியை பிற்பகல் 12.29 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 12.10 மணிவரை
சுப நேரம் 7.30-9.00 மணிவரை
இராகு காலம் 1.30-3.00 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்.

**வளவன்**

**மேஷம்** புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** சொந்த பந்தங்கள் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செலவாக்கு மேலோங்கும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை, வழிபாட்டால் அமைதி கூடும்.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**திறமையாக இருக்க வேண்டும் ஆனால் திமிராக இருக்கக் கூடாது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1089





கையில் அங்குசத்துடன் சற்று முன் யானையை நோக்கி ஓடி வந்தவன் இவனேதான்! அங்குசம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதுவும் குளத்தில் விழுந்து விட்டதா?

முருகய்யன் அவன் அருகில் சென்று, "யானைப் பாகா! நல்ல வேளை பிழைத்து எழுந்து வந்தாய்! அங்குசம் எங்கே?" என்று கேட்டான்.

ரேவதாஸன் என்னும் கிரமவித்தன் முருகய்யனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "என்னப்பா கேட்கிறாய்? நீ யார்? நான் இப்போது தான் குளத்தில் குளித்துவிட்டுக் கரை ஏறுகிறேன்!" என்று சொன்னான்.

"ஓகோ! அப்படியா? நீ யானைப்பாகன் இல்லையா? யானை தூக்கி எறிந்தது உன்னை அல்லவா? அப்படியானால், யானைப்பாகன் எங்கே இருக்கிறான்?" என்று கேட்டான்.

கிரமவித்தன் மேலும் திகைப்புடன், "நான் என்ன கண்டேன்? என்னை ஏன் கேட்கிறாய்?" என்றான்.

"மந்திரவாதி! என்னை ஏன் ஏமாற்றப் பார்க்கிறாய்? நேற்றிரவு யானைப்பாகனை இடுகாட்டுக்கு அழைத்துப் போய் 'இளவரசர் ஏறும் யானைக்கு மதம் பிடிக்கும்' என்று எச்சரிக்கை செய்தாயே? அப்படியிருக்க, அந்த எச்சரிக்கையை நீயே மறந்துவிட்டு யானையிடம் அகப்பட்டுக் கொண்டாயே? அது உன் பாடு! யானைப் பாகன் எங்கே? என் மனைவி ராக்கம்மாள் எங்கே?" என்று கேட்டான் முருகய்யன். கிரமவித்தனின் முகத்தில் முன்னைவிடத் திகைப்பும் பீதியும் அதிகமாயின.

"யானைப்பாகனாவது? ராக்கம்மாளாவது? உனக்கு என்ன பைத்தியமா?" என்று சொல்லிக்கொண்டே கிரமவித்தன் சுற்று முற்றும் பார்க்கலானான்.

"ஆம், ஆம்! யானைக்கு மதம் பிடித்தது போலத் தான் எனக்கும் பைத்தியம் பிடித்திருக்கிறது! யானைப் பாகன் எங்கே என்று மட்டும் சொல்லிவிடு! இல்லாவிடில்" என்று முருகய்யன் சிறிது அதிகார தோரணையில் அவனிடம் பேசத் தொடங்கினான்.

சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த ரேவதாஸன் இப்போது முருகய்யனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். "நீ என்னை 'மந்திரவாதி' என்கிறாய்! நீ என்னை விடப் பெரிய மந்திரவாதியாயிருக்கிறாயே! உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது! உன்னிடம் மறைப்பதில் பயனில்லை. 'யானைக்கு மதம் பிடிக்கப் போகிறது! அதன் பேரில் ஏற வேண்டாம்' என்று இளவரசருக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே ஓடி வந்தேன். அதன் பலன் இப்படி ஆயிற்று. உன் மனைவியும் யானைப்பாகனும் அங்கே ஒரு வீட்டில் இருக்கிறார்கள். அவர்களை நீ பார்க்க விரும்பினால், நானே அழைத்துப் போகிறேன். இளவரசருக்கு ஒன்றும் நேரவில்லையே! சௌக்கியமாயிருக்கிறார் அல்லவா?" என்றான்.

"இளவரசர் சௌக்கியம். அவர் தான் உன்னையும், யானைப் பாகனையும் அழைத்துக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டார்"

"இளவரசரிடம் எனக்கு நல்ல பரிசு வாங்கித் தர வேண்டும்! பார்க்கப் போனால், அவரை நான் காப் பாற்றியது உண்மை தானே? ஆ! அதோ...!" என்று மந்திரவாதி வியப்புடன் கூறி நிறுத்தினான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஏரிக்கரையில் பேய்



(நேற்றைய தொடர்ச்சி)

கிழவர் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார். ஆனால், தரையில் படுத்துப் போர்வையால் தலைமுதல் கால் வரை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தார். கண்களையும் மூடிக் கொண்டார். எல்லாரும் தூங்குகிற போது பேய் வந்து தன்னைக் கொத்தினால், யார் உதவிக்கு வருவார்கள் என்று நினைத்துப் பார்த்தபோது அவர் நெஞ்சு நடுங்கியது. நடு நடுவில் கிழவர் போர்வையை நீக்கி வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நள்ளிரவு நேரம். ஒரே இருட்டு. திடீரென்று ஏரியின் நடுவில் தண்ணீரில் யாரோ இரண்டு பேர் மோதிக் கொண்டு சண்டை போடுவது போன்ற ஓசை எழுந்தது. கிழவர் பயந்து துள்ளிப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த செய்தியாளர் மேல் போய் விழுந்தார். "பேய்! பேய்!" கம்மலான குரலில் நடுக்கத்துடன் பேசினார். மற்ற செய்தியாளர்கள் எழுப்பப்பட்டனர். பெரிய ஒளி விளக்குகள் ஏரியை நோக்கி ஒளி பெருக்கிப் பளிச்சிட்டன. ஏரியின் நடுவில் ஒரு பெரிய பறவை இறக்கைகளால் நீரைப் படபட வென்று அடித் தபடி நீந்திக் கொண்டிருந்தது.

மஞ்சளும் சிவப்புமான அதன் இறக்கைகள் நீர்ப்பரப்பை அடித்துக் கொண்டிருந்தன. "பெலிகன், பெலிகன்" என்று ஒரு செய்தியாளர் கூவினார்.

உடனே மற்றொரு செய்தியாளர், "சென்றவாரம் நம் நாளிதழில் ஓர் அறிவிப்புப் போட்டிருந்தோமே! உயிர்க்காட்சி சாலையிலிருந்து ஒரு பெலிகன் பறவை தப்பியோடி விட்டது. மஞ்சளும் சிவப்புமான இறக்கைகளுடன் கூடிய அந்தப் பறவை மனிதர்களை அடித்து வீழ்த்தும் ஆற்றல் உடையது. காண்பவர்கள் தகவல் கொடுக்க வேண்டும் என்று" என்றார்.

மறுநாள் காலையில் உயிர்க்காட்சி சாலைக்குச் செய்தியனுப்பப்பட்டது. பெரிய வலைகளுடன் கூடிய சரக்குப் பேருந்தில் ஆட்கள் வந்து இறங்கினார்கள். சுற்றி வளைத்துக் கொண்டு அந்தப் பெலிகன் பறவையை வலைக்குள் விழும்படி விரட்டினார்கள். வலையில் அகப்பட்ட பறவை அதே சரக்குப் பேருந்தில் உயிர்க்காட்சி சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. புறப்படும்போது அந்தப் பெலிகன் பறவை, செய்தியாளர்களைப் பார்த்துச் சீறியது.

பேய்ப் பீதியைக் கிளப்பிவிட்ட கிழவருக்கு வீண் வதந்தியைப் பரப்பியதற்கான தண்டனை கிடைத்திருக்க வேண்டும் ஆனால், தப்பிச்சென்ற பறவையைப் பிடிப்பதற்குத் தகவல் கொடுத்ததற்கான பரிசு கொடுக்கப்பட்டது.

பரிசு கிடைத்த மகிழ்ச்சியில் அந்தக் கிழவர் "எல்லாம் நன்மைக்குத் தான்!" என்று கூறினார். இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும் இல்லாத பேய்களைப் பற்றிப் பேசமாட்டேன் என்று செய்தியாளர்களிடம் உறுதி கூறினார்.

பேயின் அச்சம் நீங்கிப் பெண்கள் ஏரிக் கரைக்குச் சென்றனர். மறுநாள் சந்தையில் பெர்ரிப் பழங்கள் கூடை கூடையாக வந்து இறங்கின.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகுதி என ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய வயதை நீடிக்கலாமா?

அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய வயதை நீடிப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராயவுள்ளதான செய்திகள் வெளிவந்துள்ளன.

முன்பெல்லாம் அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயது 55 ஆக வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஓய்வுபெறும் காலம் 60 வயதாக நீடிக்கப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, அரச உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயது 65 ஆக உயர்த்தப்பட்டது.

ஆயினும் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகிய போது அரச உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயது மீளவும் 60 ஆக வரையறை செய்யப்பட்டது.

இப்போது அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம், ஓய்வு பெறும் வயது தொடர்பில் ஆராயவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது ஓய்வு பெறும் 60 வயதை 65 வயதாக உயர்த்தி, பின்னர் அதனை மீளவும் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டியதற்கான காரணத்தை முதலில் அறிய வேண்டும்.

ஆம், எமது நாட்டின் மருத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக, மக்களின் ஆயுள், ஆரோக்கியம் உயர்வடைந்த நிலையில் 55 வயதை 60 ஆக உயர்த்துகின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப்போது ஓய்வு பெறும் 60 வயதை இன்னும் அதிகரிப்பதற்கான ஆராய்ச்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. பரவாயில்லை தேவைகள், காலசூழ்நிலைகளின் பொருட்டு குறித்த விடயம் ஆராயப்பட வேண்டியதாக இருக்கலாம்.

ஆனால் தனித்து ஆயுள், ஆரோக்கியம் மற்றும் அனுபவசாலிகளின் தேவைப்பாடு என்பவற்றோடு மட்டும் நின்று கொண்டு, ஓய்வு பெறும் வயதைத் தீர்மானிப்பது அபத்தமானது.

அரச உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதைத் தீர்மானிப்பதில் பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வது மிகவும் கட்டாயமானது.

ஆம், ஓய்வு பெறும் வயது 60 என்பதால், ஒரு நல்ல உத்தியோகத்தரின் சேவையை மக்கள் இழக்கின்றனர் எனக் கவலைப்படுவதில் நியாயமுண்டு.

அதே நேரம் மிக மோசமான – மனித குலத்திற்கே உதவாத பத்து ஜென்மங்கள் 60 வயதுடனாவது வீடேகிறது என்ற மக்களின் மன ஆறுதலில் மண்ணைக் கொட்டிவிடுவதாக, அறுபது வயதிலும் ஓய்வு பெறாமல் அதனைக் கடந்தும் பணியாற்றுகின்றதாக இருந்தால், பொதுமக்களின் நிலை என்ன? இதற்கும் மேலாக, 60 வயது என்பது பணி நிலையில் சலிப்புக் குரியதே.

ஆக, சமகால சூழலில் கணிசமான அரச பணியாளர்கள் தமது கடமைகளை செவ்வனே செய்வதில்லை. அவர்களுக்குப் பொது மக்களுடன் சிறந்த தொடர்பாடலை மேற்கொள்ளத் தெரிவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் பரவலாக இருக்கும் போது, ஓய்வு பெறும் வயதை 60 இற்கும் அப்பால் கொண்டு செல்வது அவ்வளவு நல்லதல்ல.

# விவசாய உபகரணங்களுக்கு வரி சிகரெட்டுக்களுக்கு சலுகை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(அம்பாந்தோட்டை)

அரசாங்கம் விவசாய உபகரணங்களுக்கு மேலும் வரிகளை விதித்துள்ள போதிலும், சிகரெட்டுகளுக்கு தொடர்ச்சியாக வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று நேற்று (15) இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2026 ஜனவரி முதல் ஜூலை 14 வரை சிகரெட் நிறுவனத்திற்கு 9.2 பில்லியன் இலங்கை ரூபாய் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயம் செய்வதற்குத் தேவையான விவசாய உபகரணங்களுக்கு அரசாங்கம் இந்த வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

சிகரெட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகளையும், விவசாய உபகரணங்களுக்கு வரிச் சுமையை மேலும் மேலும் அதிகரிப்பதற்கே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

நெற்செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளைப் பாதுகாப்பதாகக் கூறி, அரசாங்கம் நிலையான விலையாக நாட்டு நெல்லுக்கு 120 ரூபாவும், சம்பாவிற்கு 130 ரூபாவும், கீரி சம்பாவிற்கு 140 ரூபாவும் என்ற அடிப்படையில் விலைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

ஆனால் தேர்தல் காலங்களில் வயல் வெளிகளுக்குள் இறங்கி நெற்கதிர்களைக் கடித்துக் கொண்டு, நெல்லுக்கு 150 ரூபாய் நிலையான விலையை நாட்டின் சட்டமாக மாற்றித் தருவோம் என்று பிரஸ்தாபித்தனர்.

முன்னர் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட இதுவரை நிறைவேற்றவில்லை. நமது நாட்டில் சமகாலத்தில் விவசாயம் நட்டமடையும் ஒரு தொழிலாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## 19 வயது இளைஞன் விபத்தில் மரணம்

(கம்பஹா)

கம்பஹா, வெலிவேரிய - பியகம வீதியின் 18ஆம்கட்டைப்பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில், 19 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பியகம நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று, மற்றுமொரு முச்சக்கரவண்டி ஒன்றுடன்மோதிய தில் கட்டுப்பாட்டை இழந்து அருகில் வந்த கார் ஒன்றின் மீதும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதியான கடுவெல பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் மீட்கப்பட்டு உடுபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

## நபர் ஒருவரை கொலை செய்த இருவருக்கு மரண தண்டனை

### பாலபிட்டிய உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை வழக்கில், பாலபிட்டிய உயர் நீதிமன்றம் இருவருக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

சுமார் 15 ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி ருசிரா வெலிவத்த நேற்று அறிவித்தார்.

முதல் குற்றவாளியான வஹம்புரகே திலக் புஷ்ப குமார மற்றும் இரண்டாம் குற்றவாளியான வீரதுங்க சமிந்த ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, தண்டனைச் சட்டத்தின் 296வது பிரிவின் கீழ் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (ம-7)

## மாணவர்களை இலக்கு வைத்து போதை விற்பனை தம்பதியினர் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் முவங்கல, ஹிங்குரன மற்றும் தமன ஆகிய பகுதிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் நீண்டகாலமாக இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களைக் குறிவைத்து 'ஐஸ்' மற்றும் ஹெராயின் போதைப்பொருட்களை விநியோகித்து வந்த தம்பதியினர், அம்பாறை பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று (15) கைது செய்யப்பட்டுள்ளனர்.

முவங்கல பகுதியிலுள்ள உக்சிரிபுர பாடசாலைக்கு அருகில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட முயன்றபோதே இவர்கள் கையும்மெய்யுமாகச் சுற்றி வளைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் முவங்கல கிராமம் 8 ஐச் சேர்ந்த 37 மற்றும் 34 வயதுடைய தம்பதியினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட போது ஆண் சந்தேக நபரிடமிருந்து 5,120 மில்லிகிராம் ஹெரோயின், பெண் சந்தேகநபரிடமிருந்து 2,500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 81ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 81ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் (18.07.2026) சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மன்றத்தின் சங்கிலியன் அரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்,

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி வி.மதிவதனி, சங்கிலியன் மன்ற மூத்த உறுப்பினர் அ.மனோகரன், மன்றக் காப்பாளர்களான இ.ச.பே.நாகரட்ணம், மருத்துவர் வை.தியாகராசா, பிரபல நாதஸ்வர கலைஞர் பி.ரஜீவன் மற்றும் யாழ். C.D.B. வங்கி முகாமையாளர் திருமதி சுறமியா சுதர்சன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் 2025ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளான் விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் திட்டம்

## விவசாய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் கமநல காப்பீட்டு சபை, காளான் செய்கையாளர்களுக்காகப் புதிய காப்பீட்டுத் திட்டமொன்றை அறிமுகப் படுத்தத் தீர்மானித்துள்ளது.

காளான் செய்கையை ஊக்குவிப்பதையும், எதிர்பாராத பயிர்ச் சேதங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, 250 வளர்ப்புப் பைகளை கொண்ட ஒரு காளான் வளர்ப்பு அறையை, மூன்று மாத காலப்பகுதிக்கு சுமார் 2,025 ரூபாய் பிரீமியத்தைச் செலுத்தி காப்பீடு செய்ய முடியும்.

நோய்த்தாக்கங்கள் அல்லது பூச்சிகளின் தாக்கங்களால் காளான் செய்கைக்குச் சேதம் ஏற்பட்டால், ஒரு தொகுதிக்கு 22,500 ரூபாய் வரை நட்ட ஈடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமையக் காளான் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மாத்திரமே இந்தக் காப்பீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள்.

காளான் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், விவசாய மற்றும் கமநல காப்பீட்டு சபையினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# குமார ஜயகொடிக்கு எதிரான ஊழல் வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)


முன்னாள் அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த விசாரணையின் போது, பிரதிவாதி சார்பில் முன்னிலையான இரு சாட்சிகளின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, வழக்கின் மேலதிக விசாரணைகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 07ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கை உர நிறுவனத்தின் கொள்முதல் முகாமையாளராக கடமையாற்றிய காலத்தில், அந்த நிறுவனத்தின் களஞ்சியசாலை வளாகத்தில் கார்பட் இடும் பணிகளை ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கியதில், அந்த நிறுவனத்திற்குச் சாதகமான முறையில் செயற்பட்டு ஊழல் புரிந்ததாக முன்னாள் அமைச்சர் குமார ஜயகொடி மீது கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தாதியர்களின் ஓய்வு வயது வரம்பை 2 வருடங்களால் நீடிக்க கோரிக்கை



(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடுமையான தாதியர் வெற்றிடத்துக்கு தீர்வு காணும் வகையில், ஓய்வு பெறவுள்ள தாதியர்களின் பணிக்காலத்தை இரண்டு வருடங்களால் நீடிக்குமாறு அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதத்தை சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அவர்களைப் பராமரிக்கத் தேவையான தாதியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது.

அரசாங்கம் புதிய தாதியர்களை ஆட்சேர்ப்பதற்குத் தயாராக இருந்தாலும், அவர்களுக்குப் பயிற்சி அளித்து சேவையில் இணைப்பதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் தேவைப்படும்.

தற்போதைய நிலையில் நிலவும் தாதியர் பற்றாக் குறையினால், ஒரு தாதியர் மூன்று பேரின் பணிச் சுமையைச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கடுமையான பணிச்சுமை காரணமாக தாதியர்களும் நோய் வாய்ப்படும் அபாயம் உள்ளதாகவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியான சூழலைத் தணிப்பதற்காக, ஓய்வு பெறவுள்ள தாதியர்களின் வயது வரம்பை இரண்டு வருடங்களால் நீடிப்பதற்கு ஜனாதிபதி தனது நேரடி மற்றும் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும் என அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தனது கடிதத்தில் கோரியுள்ளது. (3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3380

**சந்தோஸ்**

என்னடா இது .. மாமியரும் மருமகளும் ஒன்னா சேர்ந்து சிரிச்சு பேசிக்கிட்டிருக்காங்க



இது ஆபத்துக்கான அறிகுறி ஆச்சே

**தரணியா**

கணக்குல ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்



உங்க மூணாவது பொண்ணுக்கு ஏன் 'அஞ்சு' னு பேர் வைச்சிருக்கீங்க

**ஹரோன்**

எல்லாரையும் நம்புங்க,
துரோகம் பழகிடும்
யாரையுமே கண்டுக்காதீங்க
தன்னம்பிக்கை
தானா வந்திடும்

**ஜென்சி**

Banana க்கு தமிழ்ல என்னன்னே
வாழைப்பழம்
அப்போ Mango க்கு... மாம்பழம்
அப்போ Apple க்கு தமிழ்ல......
இதை கேட்டா அடிக்க வராங்கண்ணே



**மாதேஸ்**

உங்க மனைவி என்ன நட்சத்திரம் தம்பி......?



சரியா தெரியல சாமி..அவ பண்றதெல்லாம் பாக்கும் போது கண்டிப்பா அவ எரி நட்சத்திரம்மா தான் சாமி இருப்பா

**மனோகரி**

அம்மா தானே அடிச்சாங்க இதுக்காக இவ்வளவு அழலாமா கண்ணா...?



யோவ் ...உனக்கு அம்மாகிட்ட அடிவாங்கி பழகிப்போச்சு ... ஆனா எனக்கு வலிக்குதுயா....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | noolaham.media

## புலிகளின்...

ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி கொழும்பிலிருந்து வருகை தந்த குற்றப்புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றத்தின் அனுமதியைபெற்று ஜேசிபி இயந்திரத்தின் மூலம் அகழ்வு பணியை ஆரம்பித்திருந்தனர். இருப்பின் ஊடகங்களுக்கான செய்தி சேகரித்தலுக்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற அகழ்வின் போது எதுவும் கிடைக்காத நிலையில் முதலாம் நாள் அகழ்வுப் பணி நிறைவு பெற்றிருந்தது. இரண்டாம் நாள் அகழ்வு பணி நேற்று (15) புதன் கிழமை நடைபெற்றது.

எனினும் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

மஹஜன சம்பத NLB
திகதி 2026.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 6249
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 5 4 6 9 9 7
அத சம்பத — U 6 9 9 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0824

சுப தவசக் NLB
திகதி 2026.07.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0385
துலாம் — 29 49 65 — 0924

தன நிதானய
திகதி - 2026.07.15
சீட்டிழுப்பு இலக்கம் - 2279
M 07 08 39 62 M

மெகா பவர்
திகதி 15/07/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2597
P 13 18 49 55 59

ஜய NLB
திகதி 2026.07.15 — சீட்டிழுப்பு இலக்கம் 0517
C 6 8 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4491
சீட்டிழுப்பு திகதி 15.07.2026
I 14 27 42 65
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 1558
கும்பம் 03 05 15 34 கும்பம்

## மாநகர முதல்வர்...

அவர் தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவே இவ்வாறு பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் ரொபர்ட் ஹின்கெந்த தனது முதல்வர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்த போதிலும், பின்னர் அவர் அந்த முடிவை மாற்றிக்கொண்டதாக அறிக்கைகள்வெளியாகியிருந்தன.

எனினும் அவர் நேற்று (15) உத்தியோகபூர்வமாக தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## ஆளுநரின்...

வரின் பதவிகளை நீக்கி மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு, நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கின் பிரதிவாதிகளான மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான அரச சட்டவாதி தனது சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

பிரதிவாதிகளின் ஆட்சேபனைப் பதில்களை நீதிமன்றுக்கு தெரிவிப்பதற்கு மேலதிக கால அவகாசம் வழங்க வேண்டும் என அவர் கோரினார். இதற்கு மனுதாரர் தரப்பு எதிர்ப்பினை தெரிவிக்கவில்லை.

அத்துடன், கடந்த 3ஆம் திகதி மனுதாரருக்குச் சாதகமாக நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணங்களை (தடையுத்தரவை) தாம் கடுமையாக எதிர்க்கப் போவதாகவும் அரச சட்டவாதி இதன்போது சுட்டிக் காட்டினார்.

இதனைப் பரிசீலித்த நீதிமன்றம், பிரதிவாதிகளான ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரது ஆட்சேபனைப் பதில்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

அத்துடன் மாநகர முதல்வரைப் பதவியிலிருந்து நீக்கிய ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக கடந்த மூன்றாம் திகதி விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நீடித்து மன்றால் உத்தரவிடப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றில்முன்னிலையாகியிருந்தார்.(ம-7,250)

## கழிவு மீள்சுழற்சி...

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்பாக நேற்றுப் புதன்கிழமை காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர சபையின் கழிவு மீள் சுழற்சி மையம் காக்கைதீவு பகுதியில் அமைந்துள்ளது. தற்போது அங்கு மீள் சுழற்சிகள் இடம்பெறாமல் குப்பைகள் கழிவுகளை கொட்டுவதனால், அயலில் வசிக்கும் தாம் பல்வேறு இடர்களைச் சந்திப்பதாக குறித்த மீள்சுழற்சி மையத்திற்கு அருகில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர சபையினால் , காக்கைதீவு பகுதியில் கழிவு மீள்சுழற்சி மையம் அமைக்கப்பட்டது. எமது குடிமனைப் பகுதியில் அவை அமைக்கப்படும் போது, இது குப்பை கொட்டும் இடமில்லை. கழிவுகளை தரம் பிரித்து , அவற்றை மீள் சுழற்சி செய்யும் இடம் எனக் கூறினார்கள்.

ஆரம்பத்தில் அவ்வாறே இயங்கியது. அங்கு கழிவுகளில் இருந்து உரங்கள் செய்யப்பட்டன. கழிவு மீள் சுழற்சியே நடைபெற்றது.

சிறிது காலத்தில் அவை கைவிடப்பட்டு, குப்பை கொட்டும் இடமாக மாறியது. அங்கு கழிவுகளை தரம் பிரிக்காது கொட்டி குப்பை மேடுகளாக அப்பகுதிகளை மாற்றியுள்ளனர்.

மலசல கூட கழிவுகள், தனியார் உணவகங்கள், தங்குமிட கழிவு நீர் என்பவற்றை அங்கு முன்னர் வடிகட்டும் செயற்பாடுகள் நடைபெற்றது. தற்போது அவை உரிய முறையில் வடிகட்டாது நீரினை அங்குள்ள வாய்க்காலுக்குள் விடுவதனால், அருகிலுள்ள நாம்பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கிறோம்.

குறித்த கழிவு மீள் சுழற்சி மையத்திற்கு அருகில் உள்ள குடிமனைகளில் வாழும் குடும்பங்களில் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள்உள்ளன. அது மட்டுமின்றி சுவாச நோய்கள், ஆஸ்துமா உள்ளிட்ட தொற்றா நோய்களுடன் நோயாளிகள் உள்ளனர். இந்த நோய் தொற்றுக்களுக்கு கூட இந்தக் கழிவு மீள் சுழற்சி மையம் காரணம் எனக் கருதுகிறோம்.

எனவே இந்த கழிவு மீள் சுழற்சி மையத்தை எமது குடிமனைப்பகுதிகளிலிருந்து அகற்ற வேண்டும் எனக் கோருகிறோம் என்றனர். (ம-7,33)

## தேசிய...

இல்லாவிட்டாலும் விண்ணப்பிக்க முடியும் என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கடந்த 03.07.2026 ஆம் திகதி முதல் நிகழ் நிலை (Online) முறையில் கோரப்பட்டு வருவதுடன் எதிர்வரும் 23.07.2026 ஆம் திகதி வரை மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்ப நடைமுறைகள்தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, தேசிய அடையாள அட்டை இல்லாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி பரீட்சைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து விண்ணப்பதாரிகளும் 23.07.2026 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை நிகழ்நிலை முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி நீடிக்கப்பட மாட்டாது என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.07.2026 — வெற்றி வாரம் 0957
ஆங்கில எழுத்து U — மற்றும் வெற்றி இலக்கம் 0 1 9 1 7 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,100,236.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3223 — 25000 பணப் பரிசு 50856
சீட்டிழுப்பு திகதி 2026.07.15 — தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 41 54 77 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,809,374.40
DLB

சனிதா
திகதி 15.07.2026 — வெற்றி வாரம் 5384
வெற்றி இலக்கங்கள் 15 27 38 70 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,367,277.60
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/- 82903
DLB

சசிரி
வெற்றி வாரம் 1053
சீட்டிழுப்பு திகதி 15.07.2026 — புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 31 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,141,800.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4935
சீட்டிழுப்பு திகதி 15.07.2026 — தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 44 54 58 — தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,697,052.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 32 22 44 53 63
2399 — 15.07.2026 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.316,600,779.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை — வெற்றி வாரம் 3049 — சீட்டிழுப்பு திகதி 2026.07.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,039,525.60
வெற்றி இலக்கங்கள் 31 59 68 70 J
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழில்...

அண்மையில் திருநெல்வேலி பகுதியில் பலாலி வீதியை அண்மித்த வெற்றுக் காணி ஒன்றினை கையகப்படுத்தும் நோக்குடன் அவற்றுக்கு எல்லைத் தூண்களை நடும் வேலையில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பில் அறிந்த காணி உரிமையாளர் அவ்விடத்திற்குச் சென்று, தனது காணிக்குத் தூண்களை நடுவது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு குறித்த கும்பல் காணி தம்முடையது எனவும், உன்னுடைய காணி என்றால், அதற்கான உறுதி ஆவணங்களை கொண்டு வந்து உறுதிப்படுத்து என மிரட்டும் தொனியில் கூறியுள்ளனர். உங்கள் காணி என்றால் அதற்கான ஆவணங்களை காட்டுங்கள் என காணி உரிமையாளர் கேட்ட போது அவற்றைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தான் பொலிஸில் முறையிடுவதாகக் கூறி காணி உரிமையாளர் சென்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில், குறித்த கும்பல் காணியில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளது.

அதேவேளை குறித்த கும்பல் சில தினங்களுக்கு முன்னரும் திருநெல்வேலிப் பகுதியில் வேறொரு வெற்றுக் காணிக்கு தூண்களை இடும் பணிகளில் ஈடுபட்டவேளை காணி உரிமையாளர் சென்று கேட்ட போதும் காணி உரிமையாளரை மிரட்டிய போது, அவர் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பினை மேற்கொள்ள முயன்ற வேளை காணியில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

குறித்த கும்பல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், வெற்றுக்காணிகளை இலக்கு வைத்து செயற்படும் கும்பல் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். (ம-7,33)

## பார ஊர்தி..

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

சங்குபிட்டி பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக குறித்த பாலத்தினுடாக பார ஊர்திகள் (ரிப்பர், லொறி, கொள்கலன் ஊர்திகள்) செல்வது மிகவும் ஆபத்தினை ஏற்படுத்தும்.

எனவே மறு அறிவித்தல் வரும் வரை குறித்த பாலத்தினூடாக பாரஊர்தி போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
விசேட செயலமர்வு - 2026
18, 19, 20 July 2026 – தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
21, 22, 23 July 2026 – பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்.
24, 25, 26 July 2026 – ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம் (07)
காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரை
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-6051)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-6054)
076 825 7716 (ஆகாஸ்)

6 Wheel தட்டு லொறி மாத வாடகைக்கு தேவை
அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு நிறுவனப் பொருட்களை கொழும்பிற்கு ஏற்றிச் செல்வதற்கு நல்ல நிலையில் உள்ள 6 Wheel தட்டு லொறி மாத வாடகைக்கு தேவைப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொடர்பிலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தொடர்பு எண் : 0773151654
இடம் : Reecha Papers (Pvt) Ltd
கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி (8058)

இயங்கு நிலையில் உள்ள உணவகம் குத்தகைக்குண்டு
யாழ்.நகர் சிவன் கோயிலடியில் இயங்கும் சைவ, அசைவ உணவகம் ஒன்று தளபாடங்கள் கண்ணாடி, Fitting அடங்கலாக குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 077 844 9861 (7492)

2ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25 . 06 . 1941

இறைவன் அடியில் 07 . 07 . 2024

அமரர் Dr.கந்தையா பாலசுப்பிரமணியம் (Dr.பாலா)

இரண்டு ஆண்டுகள் கடந்தாலும்,
இதயத்தில் உங்கள் நினைவுகள் என்றும் பசுமை.
அன்பால் எங்களை அரவணைத்த கரங்கள்,
இன்றும் எங்கள் வாழ்வின் வழிகாட்டும்
ஒளியாகவே இருக்கின்றன.

உங்கள் புன்னகை எங்கள் பலம்,
உங்கள் பண்புகள் எங்கள் பாதை.
நீங்கள் எம்முடன் இல்லாவிட்டாலும்,
உங்கள் ஆசிகளும் நினைவுகளும்
எம்மோடு என்றும் நிலைத்திருக்கும்.

'நினைவுகளில் நீங்கள் என்றும் உயிருடன்...
எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருப்பீர்கள்.'

செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு. இணுவில். (8057)

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 23 . 05 . 1978

ஆண்டவனின் நிழலில் 08 . 07 . 2024

அமரர் மன்மதராசன் சாரதா

திதி: 16.07.2026 (வியாழக்கிழமை)

கண்ணீரில் நனையும் இரண்டு ஆண்டுகள்!
கண்ணிமைக்கும் நேரத்தில் கரைந்து போனது இரண்டு ஆண்டுகள்!
ஆனால், என்றும் கரைந்து போகாது எங்கள் நெஞ்சில் பதிந்த உமது நினைவுகள்!
மண்ணில் நீர் வாழ்ந்த காலம் எங்கள் வாழ்வின் வசந்தகாலம்!
விண்ணில் நீர் வாழும் காலம் உமது ஆன்மாவின் அமைதி காலம்!
அன்பின் வடிவமாய், அமைதியின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளியாய் வாழ்ந்த தேவதையே!
உங்களின் இழப்பை எங்களால் இன்னும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை
காலம் வேகமாக நகர்ந்தாலும் உங்களின் கனிவான வார்த்தைகளும் பிரகாசமான புன்னகையும் எங்கள் நினைவுகளில் பசுமையாகவே வாழ்கின்றன.
நீங்கள் இருந்த இடத்தை இந்த உலகத்தில் இனி எவராலும் நிரப்பவே முடியாது.
எங்கள் இல்லத்து தேவதையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!*

வெற்றி மஹால்
வளர்பிறை,
ஊரெழு கிழக்கு. (C-6053)

பிரிவுத் துயருடன்:- கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர். 077 615 2390

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.151, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media